5. எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் அவையில் நடந்து கொண்ட விதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மரபிற்கும், வரலாற்றுக்கும் மாறாக சட்டமன்றத்தையே களங்கப்படுத்துகின்ற வகையிலே ஏதோ இங்கே ஒரு சினிமா படப்பிடிப்பில் வசனம் பேசுவதைப்போல இங்கே தரக் குறைவாக—அதிலும் கௌரவமாகவும் நடந்துகொள்ளவில்லை—கண்ணியக் குறைவாக, தரக் குறைவாக, அவமானகரமாக நடந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவருடைய நடவடிக்கையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற்கு நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 11– 55

3. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதான உரிமை மீறல் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவரது கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவைநடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையிலும், பிற வகைகளிலும் செயல்பட்ட காரணத்தினால் பேரவை விதி 226–ன்கீழ் உரிமை மீறல் குழுவிற்கு இதை அனுப்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*